பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

09 10 2024 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தை குஜராத் மாநிலம், **Lothal-**-ல் ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது..

2. மக்கள் மருந்தகங்களில் அத்தியாவசிய மருந்துகள் மிக குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. மின்சார வாகனங்களின் பயன்பாட்டிற்கு கூடுதல் ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது..

4. வேதியியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் **David Baker** மற்றும் இங்கிலாந்தின் **Demis Hassabis - John Jumper** இணைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Pranay Shettigar, Tanvi Sharma** மற்றும் **Aalisha Naik** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>><<<<<**

தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தை குஜராத் மாநிலம், **Lothal-**ல் ஏற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் மாநிலங்களுக்கு உட்பட்ட எல்லைப் பகுதிகளில் சாலை மைப்பதற்கான திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், 4 ஆயிரத்து 406 கோடி ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 280 கிலோமீட்டர் தொலைவிற்கு சாலை அமைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

பல்வேறு மக்கள்நலத் திட்டங்களுக்கு இலவசமாக செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கும் திட்டத்தை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ரத்தசோகை குறைபாட்டை களையவும் இந்த நடவடிக்கை உதவிடும் என்று அவர் கூறினார்.

17 ஆயிரத்து 82 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகள் ஊட்டச்சத்து குறைபாடுகளை களைவதற்கும், எல்லைப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் உதவிடும் என்று தகவல் ஒலிப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், எல்லையோரப் பகுதியில் உள்ள கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அமைச்சரவையின் இந்த முடிவுகள் வலு சேர்க்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

ஆயுர்வேத சிகிச்சை முறை உலக அளவில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத மையத்தின் நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

உலகின் மிகவும் பழமையான சிகிச்சை முறை ஆயுர்வேதா என்று அவர் குறிப்பிட்டார்.

உடல்நலன் மற்றும் மனநலனை சீராக பராமரிப்பதற்கு இந்த சிகிச்சை முறை உதவிடும் என்றும் அவர் கூறினார்.

வரும் காலங்களில் தகுதிவாய்ந்த ஆயுர்வேத மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் குடியரசுத்தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

மக்கள் மருந்தகங்களில் அத்தியாவசிய மருந்துகள் மிக குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மகாராஷ்ட்டிராவிற்கான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

கூடுதலாக 75 ஆயிரம் மருத்துவ படிப்பிற்கான இடங்களை உருவாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் கூறினார்.

மருத்துவர்களாக வேண்டும் என்ற ஏழை மற்றும் நடுத்தர வர்க்க குடுமபங்களைச் சேர்ந்த இளையோரின் கனவுகளை நனவாக்கும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நம் நாட்டில் உள்ள இளையோருக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

உலகமே இந்தியாவை தற்போது உற்றுநோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும், இதுவரை இல்லாத அளவிற்கு நவீன கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

ஹரியானா சட்டப்பேரவை தேர்தல்முடிவுகள், அம்மாநில மக்கள் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்திருப்பதையே உணர்த்துவதாக மஹாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தொடர்ந்து மூன்றாவது முறையாக அம்மாநிலத்தில் பிஜேபி அரசு அமையவுள்ளதை சுட்டிக்காட்டினார்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது, காங்கிரஸ் தெரிவித்த குற்றச்சாட்டுகளை மக்கள் நிராகரித்துள்ளதாகவும் திரு. ஏக்நாத் ஷிண்டே தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவை தேர்தல் நடவடிக்கைகள் அமைதியாக நடந்து முடிந்ததற்காக துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், தேர்தல் அதிகாரிகளும், சிறப்பாக பணியாற்றியதாக குறிப்பிட்டார்.

இந்த தேர்தலில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் வாக்களித்ததற்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக திரு. மனோஜ் சின்ஹா தெரிவித்தார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, லாவோஸில் நடைபெறவுள்ள ஆசியான் - இந்தியா உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக பிரதமர் நாளை புதுதில்லியிலிருந்து லாவோஸ் புறப்பட்டுச் செல்கிறார்.

இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ள இதர நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்பின்னர், கிழக்காசிய உச்சிமாநாட்டிலும் திரு. நரேந்திர மோடி கலந்து கொள்ளவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

மின்சார வாகனங்களின் பயன்பாட்டிற்கு கூடுதல் ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்காக, 10 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கனரக தொழில்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

வேதியியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவின் **David Baker** மற்றும் இங்கிலாந்தின் **Demis Hassabis - John Jumper** இணைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

'புரதம் வடிவமைப்பு' தொடர்பான ஆய்வுகளுக்காக அவர்களுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

அமெரிக்காவின் **Florida-** வில் **Milton** புயல் கரையை கடக்கக்கூடும் என்பதால், அதன் மேற்கு கடலோரப் பகுதியில் வசிக்கும் 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கைகளை அப்பகுதியில் வசிப்போர் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த புயல் அச்சுறுத்தல் காரணமாக, ஜெர்மனிக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவிருந்த திட்டத்தையும் அமெரிக்க அதிபர் ஒத்தி வைத்துள்ளார்.

இந்த புயல் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

>>>>><<<<<

உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Pranay Shettigar, Tanvi Sharma** மற்றும் **Aalisha Naik** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவின் **Nanchang-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டங்களில் **Pranay Shettigar** 21-11, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் **Kong Zhou Swin-**ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Tanvi Sharma** 21-19, 8-21, 22-20 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Nayu Shirakawa-**வையும், **Aalisha Naik** 21-18, 21-14 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Rajvi Parab-**ஐயும் வென்றனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Bhargav Ram – Vennala Kalagotla** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

இந்தியா – பங்களாதேஷ் இடையேயான இரண்டாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் தில்லியில் தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற பங்களாதேஷ் முதலில் பந்துவீச தீர்மானித்ததை அடுத்து, பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 4 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 29 ரன் எடுத்துள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை மகளிர் டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா - இலங்கை இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

>>>>><<<<<

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா பதக்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.

ஆடவர் பிரிவிலும் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

>>>>><<<<<

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் **Divyanshi** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

சென்னையில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஒரு இன்னிங்ஸ், 120 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>>><<<<<

தேசிய விளையாட்டுப் போட்டிகள், உத்ராகண்டில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் தேதி தொடங்கி, பிப்ரவரி மாதம் 14ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>END<<<<<